# கிறிஸ்தவமானது வருமானக் கணக்குப் புத்தகத்தைத் தாக்குகின்ற பொழுது (19:10, 20-41; 20:1)

ஒரு பிரசங்கியார், சபையை உற்சாகப்படுத்துவதற்கு முயற்சி செய்தார். அவர், "சகோதரர்களே, இந்த சபையை நாம் ஆரம்பித்து நீண்ட காலமாயிற்று. நாம் ஆரம்பித்தபோது, தவழ்வது என்பதே கடினமாய் இருந்தது, ஆனால் இப்பொழுது நாம் நடக்க முடியும்" என்றார். கட்டிடத்தின் பின்புறத்தில் இருந்து ஒரு குரல், "அது நடக்கட்டும் பிரசங்கியாரே; அது நடக்கட்டும்!" என்றது. பிரசங்கியார் ஊக்கப்படுத்தப்பட்டார். "நம்மையே நாம் ஒப்புக் கொடுத்தால், நாம் ஓட முடியும் என்று நம்புகின்றேன்!" என்று அவர் கூறினார். அந்தக் குரல், "அது ஓடட்டும் பிரசங்கியாரே; அது ஓடட்டும்" என்றது. பிரசங்கியார் உணர்வு எழுச்சி பெற்றார். "நாம் நமது சிந்தையைச் செலுத்தினால் அது கர்த்தருக்கென்று பறக்க முடியும் என்றும் கூட நான் நம்புகின்றேன்! அது, நாம் அனைவரும் நமது காணிக்கைகளை இருமடங்காக்க வேண்டும் என்று அர்த்தமாகும்!" என்று கூறினார். அப்பொழுது பின்னாலிருந்து வந்த குரலானது, "அது நடக்கட்டும் பிரசங்கியாரே; அது நடக்கட்டும்" என்றது.

வகைப்படுத்திய ஆராய்வில் மிகவும் நுண்மையானது வருமானக் கணக்கேயாகும் என்று கூறப்பட்டுள்ளது. வருடங்களினூடே எவர் ஒருவரும், "நான் மிகவும் சங்கடப்பட்டு விட்டேன்! ஒருவரை நான் ஆராதனைக்கு அழைத்து வந்தேன், பிரசங்கியார் சுவிசேஷத்தை[அல்லது சபையை, அல்லது அன்பை, அல்லது ஞானஸ்நானத்தை]ப் பற்றிப் பிரசங்கித்தார்!"

என்று கூறக் கேட்டதேயில்லை, இருப்பினும், மக்கள், “கடைசியில் நான் எனது நண்பரை என்னுடன் வர வழைக்க முடிந்தது, அது உங்களுக்குத் தெரியுமல்லவா? இங்கு வந்தால், பிரசங்கியார், காணிக்கை கொடுப்பது பற்றி பிரசங்கித்து விட்டார். என் வாழ்க்கையிலேயே என்றுமே நான் இது போலச் சங்கடத்திற்கு ஆளானதில்லை!” என்று முறுமுறுத்ததை நான் கேட்டிருக்கின்றேன்.

பணப்பையானது தாக்கப்படும் பொழுது பின்வாங்கு பவர்கள் சபை உறுப்பினர்களில் மட்டுமல்ல. புறமதத்தாரில் சிலர் தங்கள் பணப்பைகளைக் கிறிஸ்தவமானது குறைவுபடச் செய்தபோது, எவ்விதத்தில் பதில்செயல் செய்தார்கள் என்று இந்தப் பாடத்தில் நாம் காண்போம். கர்த்தருக்கான ஊழியத் தில் நமது சொந்தத் தூண்டுதல்கள் யாவை என்று ஆத்தும ஆராய்ச்சி கூட நாம் செய்யலாம். அதற்குச் செல்லு முன்பு, எபேசுவில் பவுலின் ஊழியத்தைப் பற்றிக் கற்று முடிக்கத் தேவையாயிருக்கின்றது.

## திறந்த கதவுகள் - மற்றும் விரோதிகள் (19:10, 20-22)

அப். 19ல், பவுலின் எபேசு ஊழியத்தைப் பற்றிய சிறப்புக் கருத்துக்களை மட்டுமே நாம் பெற்றுள்ளோம். மற்ற வசனக் குறிப்புகளில் இருந்து, பவுல் அங்கிருந்த மூன்று ஆண்டுகளில் பெற்ற வெற்றிகள் மற்றும் சோதனைகள் ஆகியவை பற்றிய கூடுதல் கருத்துக்களைப் பெறுகின்றோம். அவர் எபேசுவில் இருந்தபோது, “ஏனெனில் இங்கு பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது; விரோதஞ் செய்கிறவர் களும் அநேகர் இருக்கிறார்கள்'' (1 கொரி. 16:9) என்று எழுதினார்.

“அநுகூலமான [அல்லது திறந்த] கதவு என்ற உருவகமானது வாய்ப்பை, விசேஷமாக சுவிசேஷத்தை அறிவிக்கக் கிடைத்த வாய்ப்பை(2 கொரி. 2:12; கொலோ. 4:4)க் குறிப்பிடுவதற்கு வேதவசனத்தில் பயன்படுத்தப்படுகின்றது. பிரசங்கிக்கும் வாய்ப்புகள் என்ற கதவின் வழியாகப் பவுல் நோக்கமின்றி உலாச் சென்று கொண்டிருக்கவில்லை; அதன் வழியே அவர்

ஓடினார். கடைசியாக அவர் எபேசுவில் இருந்து புறப்பட்ட போது, பல பத்து ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நன்மையின் சக்தியாகச் செயல்பட்ட பலமான சபையொன்றை மூப்பர் களின் அமைப்புடன் (அப். 20:17) அவர் விட்டுச் சென்றார். மேலும், பவுல் மற்றும் அவரது உடன் ஊழியர்கள் ஆகியோரின் முயற்சிகளினால், "ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கரு மாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்'' (வ. 10ஆ; அடிக்கோடிட்டவை என்னால் வலியுறுத்தப்படுகின்றன). மூன்று வருடங்களுக்குச் சற்றுக் குறைவான கால அளவில், தமிழகத்தின் முக்கால் பகுதிக்குச் சற்று அதிகமான பரப்பளவில் இருந்த மாகாணம் (ஆசியா) முழுவதிலும் அவர்கள் சுவிசேஷத்தைப் பரப்பி (வரைபடத்தில் காணவும்), பத்துக்கும் மேற்பட்ட சபைகளை நிலைநாட்டி யிருந்தார்கள்!

அச்சமயத்தில் பவுல் பெற்றிருந்த சிறப்பான வாய்ப்பானது, முன்பு நிலைநாட்டப்பட்டிருந்த சபைகளைத் தொடர்ந்து உற்சாகப்படுத்துவதற்காயிற்று.[1] எடுத்துக்காட்டாக, எபேசுவில் பவுலின் ஊழியத்தின் போது, அவர் கொரிந்து சபையுடன் தொடர்பைப் பராமரித்து வந்தார் (1 கொரி. 5:9[2]), இது ஏஜியன் கடலைக் கடந்து அவர்களைக் காணச் செல்லுமளவு கூட நீடித்தது (2 கொரி. 12:14; 13:1[3]).

"பெரிய கதவு" திறக்கப்பட்டிருந்ததைக் குறிப்பிட்டதுடன், பவுல் தமக்கு விரோதம் செய்கிறவர்களும் அங்கிருந்ததாகக் குறிப்பிட்டார். எபேசுவில் தமது நாட்களைப் பற்றிப் பின்னால் குறிப்பிடுகையில் பவுல், "வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரைச் சேவித்தேன்" (அப். 20:19) என்று மொழிந்தார். அத்துடன், பவுல், "ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவங்களை" எழுதுகையில் ''பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப் போகத் தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று" என்று குறிப்பிட்டார் (2 கொரி. 1:8). ஒருவேளை 2 கொரிந்தியர் 11:23-27ல் குறிப் பிடப்பட்டவற்றில், யூதர்களால் அடிபட்டது (வ. 24) மற்றும் காவல்களில் வைக்கப்பட்டது (வ. 23) போன்ற சில உபத்திர

வங்கள் எபேசுவில் ஏற்பட்டிருக்கலாம். பவுல், "எபேசுவிலே துஷ்ட மிருகங்களுடனே போராடினேன்"[4] (1 கொரி. 15:32) என்று கூறினார், மற்றும் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவர் பிராணனுக்காக "தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்" (ரோமர் 16:3, 4) என்றும் கூறினார். எபேசுவில் பவுலின் உயிருக்கு அபாயம் ஏற்பட்டபோது,[5] அவருடைய நண்பர்கள் அவரைக் காப்பதற்கு தங்கள் ஜீவனையும் கொடுக்கவிருந்தார்கள்.

இந்த உணர்வு மிக்க நிகழ்ச்சிகளை லூக்கா, "இவைகள்" (அப். 19:21) என்ற பொதுமையான ஒரு சொற்றொடரில் எளிமையாக முடித்தார். நாம், "லூக்கா அவர்களே, எவைகள்? நாங்கள் அவைகளைப் பற்றிக் கேள்விப்பட விரும்புகின்றோம்!" என்று கூறலாம். நாம் அந்த விபரங்களைப் பெற விரும்பினால் நாம் பரலோகம் (பரதீசு) செல்லுகையில் பவுல் அல்லது லூக்காவிடம் இருந்து அவைகளைப் பெற வேண்டும். வேதவசனங்களின் சுருக்கக் குறிப்பு விசேஷமாய்க் குறிப்பிடத் தக்கதாகும்!

எபேசுவில் பவுல் சில வருடங்கள் இருந்த பிறகு, அங்கு தமது ஊழியம் செய்யப்பட்டாயிற்று என்று அவர் முடிவு செய்தார். சுவிசேஷமானது அந்தப் பகுதி முழுவதிலும் சென்றாகி விட்டது. பலமான சபைகள் நிலைநாட்டப் பட்டிருந்தன. மனிதர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருந்தார்கள். எபேசுவில் ஊழியத்தைத் தொடர்ந்து நிறைவேற்ற மூப்பர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஆகையால் பவுல், திட்டங்கள் தீட்டத் தொடங்கினார்: "இவைகள் முடிந்த பின்பு, பவுல் மக்கெதோனியா அகாயா என்னும் நாடுகளில் சுற்றி நடந்து, எருசலேமுக்குப் போகும்படி ஆவியில் நிருணயம் பண்ணிக் கொண்டு: 'நான் அங்கே போன பின்பு ரோமாபுரியையும் பார்க்க வேண்டியதென்று சொல்லி,' " (வ. 21). "ஆவியில் நிருணயம் பண்ணிக்கொண்டு" என்பது பவுல் தாம் தீட்டிய திட்டங்களைக் குறித்து வினயமாயிருந்தார் என்று எளிமையாக அர்த்தப்படக் கூடும், அல்லது திட்டம் தீட்டும் செயல்பாட்டில் பரிசுத்த ஆவியானவரும் ஈடுபட்டிருந்தார் என்றும் அர்த்தப் படக் கூடும்.

அப். 19:21ன்படி, பவுலின் திட்டங்கள் பின்வரும் மூன்று மடங்கானவைகளாயிருந்தன: (1) அவர் எருசலேமுக்குச்

*செல்லத் திட்டமிட்டார். எருசலேமில் இருந்த யூதக் கிறிஸ்தவர் களில் வறுமையில் வாடியவர்களுக்கு புறஜாதி கிறிஸ்தவர்களிட மிருந்து உதவிப் பொருட்களை எடுத்துச் செல்வது இந்தப் பயணத்தின் நோக்கமாய் இருந்தது (ரோமர் 15:25, 26, 30, 31). (2) அவர் எருசலேமுக்குச் செல்லும் முன்பு, மக்கெதோனியா மற்றும் அகாயா நாடுகளுக்குத் திரும்பிச் சென்று அங்கு தாம் நிலைநாட்டியிருந்த சபைகளை மறுபடியும் காண விரும்பி னார். அந்த சபைகளைப் பார்த்து உற்சாகப்படுத்துவதுடன்,[6] பவுல் எருசலேமுக்கான உபகார நிதியை முழுமையடையச் செய்யவும் விரும்பினார் (1 கொரி. 16:1, 2; 2 கொரி. 8:1-4; 9:1, 2; ரோமர் 15:26). எருசலேமுக்கு விசேஷக் காணிக்கையை எடுத்துச் சென்ற பிறகு, பவுல் அநேகமாய், அந்தியோகியாவில் இருந்த தமது "இல்லத்து" சபையை மறுபடியும் காண விரும்பி யிருக்கலாம். பிறகு (3) ரோம சாம்ராஜ்யத்தின் மையமான ரோமாபுரிக்குப் போக அவர் திட்டமிட்டிருக்கலாம். பவுல், "அநேக வருஷமாய்" (ரோமர் 15:23) அந்த சகோதரர்களைக் காண மிகுந்த விருப்பத்துடன் இருந்திருந்தாலும், இவ்விடத்தில் தான் முதன் முறையாக அவர் ரோமாபுரி செல்லும் விருப்பத்தைக் குறித்துப் படிக்கின்றோம். கிழக்கில் அவர் தம் ஊழியத்திற்கு அந்தியோகியாவை அடித்தளமாய் வைத்துக் கொண்டது போலவே மேற்கில் அவர் தம் ஊழியத்திற்கு ரோமாபுரியை அடித்தளமாய் வைத்துக் கொள்ளப் பவுல் திட்டமிட்டார் என்பது தெளிவாகின்றது.[7] அப். 19:21 வசன மானது நடபடிகளில் இயக்க மையமான ஒரு வசனம் ஆகும்; இப்புத்தகத்தின் மூன்று பகுதிகளில் கடைசிப் பகுதியானது பவுல் ரோமாபுரி வந்தடைந்தது வரை நடந்த நிகழ்ச்சிகளை வரிசைக்கிரமமாகக் கொடுக்கின்றது.*

*எருசலேமுக்கு உதவித் தொகையை நிறைவு செய்வதுதான் பவுல் மக்கெதோனியா மற்றும் அகாயா நாடுகளுக்கு விஜயம் செய்ததின் அடிப்படை நோக்கமாகும் என்று நான் ஆலோசனை தெரிவித்திருந்தேன். இருப்பினும், இந்த சபை களில் ஒன்றான கொரிந்துவின் சபைக்குப் பவுல் செல்வதற்கு இன்னும் வலுவான காரணம் ஒன்று இருந்தது. கொரிந்து சபையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துக் கொண்டு தேர்ந்தெடுக் கப்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தார்கள் (1 கொரி. 16:17). அந்தக்*

கடிதமும் (1 கொரி. 7:1) அத்துடன், செய்தியாளர்களின் அறிக்கையும் (1 கொரி. 1:11; 5:1) இணைந்து, அந்த சபையில் உபதேசத்திலும், நடைமுறையிலும் பிரச்சனைகள் இருந்ததை வெளிப்படுத்தின.[8] கவலையினால் நிறைந்தவராக (2 கொரி. 2:4) பவுல், சொஸ்தனே என்ற தமது உடன் ஊழியக்காரரிடத்தில் ஒரு கடிதத்தை எழுதக் கூறினார் (1 கொரி. 1:1, 2; 16:8, 9, 21[9]) - இதையே நாம் "1 கொரிந்தியர்" என்று அழைக்கின்றோம். இந்தக் கடிதத்தில் சபையின் பிரச்சனைகள் குறிப்பிடப்பட்டு, வெகுவிரைவில் தனிப்பட்ட பயணம் ஒன்றும் மேற்கொள்வதாக வாக்குத்தத்தமும் செய்தார் (1 கொரி. 4:19; 16:3-7).

பவுல் இந்த நிருபத்தை இளம் பிரசங்கியாராயிருந்த தீமோத்தேயுவினிடத்தில் கொடுத்து கொரிந்துவுக்கு அனுப்பி வைத்தார் (1 கொரி. 4:17; 16:10). இந்த நேரத்தில், பவுல், "தனக்கு உதவி செய்தவர்களில் இரண்டு பேராகிய தீமோத்தேயுவையும் எரஸ்துவையும் மக்கெதோனியாவுக்கு அனுப்பிவிட்டு" (அப். 19:22அ) என்று லூக்கா பதிவு செய்தார். அநேகமாய் இவ்விருவரும், கொரிந்து செல்லுமுன்[10] மக்கெதோனியாவில் ஆரம்ப ஊழியங்கள் சிலவற்றைச் செய்ய வேண்டியதாய் இருந்திருக்கும். பின்பு வெகு விரைவில் பவுல், தீமோத்தேயுவின் ஊழியத்தைத் தொடரும்படி தீத்து என்ற இன்னொரு இளம் பிரசங்கியாரை கொரிந்து நகருக்கு அனுப்பி வைத்தார்[11] (2 கொரி. 2:12, 13; 7:5-7; 8:6, 23). அதே வேளையில் பவுல், ''தான் பின்னுஞ் சில காலம் ஆசியாவிலே தங்கினான்'' (வ. 22ஆ), அங்கு தேவன் தமக்குத் தந்திருந்த திறந்த கதவுகளின் அநுகூலத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

## வெற்றி நிறைந்த பிரசங்கித்தலும் மகிழ்ச்சியின்மையும் (19:23-41)

இது எபேசுவில் பவுலின் ஊழியத்தில் நடந்த ஒரு பெரிய நிகழ்ச்சிக்கு, பவுலின் புறப்படுதலுக்கு[12] அவரை அவசரப் படுத்திய கடைசி நிகழ்ச்சிக்கு நம்மைக் கொண்டு வருகின்றது. கிறிஸ்தவமானது வருமானக் கணக்கைத் தாக்கும்போது என்ன நடக்க முடியும் என்பதை இந்நிகழ்ச்சி தெளிவாய் விளக்குகின்றது.

**"தியானாள்", தெமேத்திரியு மற்றும் ஒரு தொந்தரவு**

*வசனம் 23ல், "அக்காலத்திலே (1 கொரி. 16:8, 9), இந்த மார்க்கத்தைக் குறித்துப்[13] பெரிய கலகம் உண்டாயிற்று" என்று கூறப்படுகின்றது. இந்தக் கலகமானது ஆர்ட்டெமிஸின் கோவில்களைப் போல் வெள்ளியினால் சிறிய கோவில்களைச் செய்து விற்று வந்த தெமேதிரியு என்ற தட்டானால் ஏற்படுத்தப் பட்டதாகும் (வ. 24).*

*கிரேக்கப் பெண் தெய்வமான ஆர்ட்டெமிஸ் என்ற பெயருக்குப் பதிலாக KJVயில் ரோமானியப் பெண் தெய்வ மான தியானாளின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பழக்கமானது நடபடிகளின் புத்தகத்தில் வேறு எங்கும் தவறான கருத்துப் பதிவை (14:12) ஏற்படுத்தவில்லை, ஆனால் இவ்விடத் தில் ஏற்படுத்தலாம். தியானாள் என்பது ஒரு கன்னிப் பெண் தெய்வமாகும், ஆனால் எபேசுவிலும், வேறு எவ்விடத்திலும் ஆர்ட்டெமிஸ் என்ற பெண் தெய்வமானது பழங்காலத்திய ஆசியாவின் இனவிருத்தித் தெய்வமாக அடையாளம் காணப்படுகின்றது. இவ்விதமாக, தியானாள் என்ற தெய்வம் மான்கள் அல்லது நாய்களால் சூழப்பட்ட அழகிய இளம் வேட்டைக்காரியாகச் சித்தரிக்கப்படுகையில், ஆர்ட்டெமிஸ் என்ற தெய்வம் தாதிக்குரிய பண்புகளுடன், பல மார்பகங்களை யுடைய, உருவாக்குபவள் மற்றும் வாழ்வை அளிப்பவளாகச் சித்தரிக்கப் படுகின்றாள்.*

*ஆர்ட்டெமிஸ் என்பவள் உலக முழுவதிலும் தாய்த் தெய்வ மாக வழிபடப்பட்டாள் (வ. 27),[14] ஆனால் எபேசு நகரமே அவளுடைய வழிபாட்டின் மையமாக விளங்கியது. எபேசு நகரத்தார் அவளை தங்களுக்கென்று உரியவள் என்று நினைத் தார்கள்; அவர்கள் அவளை "எபேசியருடைய ஆர்ட்டெமிஸ்" (வ. 28, 34) என்று அழைத்தார்கள். எபேசு நகரம் "மகா தேவியா கிய ஆர்ட்டெமிஸின் கோவிற் பரிசாரகி" (வ. 35) என்று கருதப்பட்டது.*

*ஆர்ட்டெமிஸின் கோவிலுக்குள், "வானத்திலிருந்து விழுந்தது" என்று பாரம்பரியத்தின்படி நம்பப்படுகின்ற (வ. 35) தியானாளின் சிலை இருந்தது. இந்த உருவச் சிலையானது ஆர்ட்டெமிஸைப் பிரதிபலிக்கும் வகையில் இருந்ததென்று எளிதில் நம்பும்படியான ஒரு விண்கல்லாக இருந்திருக்கலாம்.*

இந்த கச்சாக்காட்டுப் பாறையை வைப்பதற்காக எபேசுவுக்குப் புறம்பே உலகிலேயே மிகப் பெரிய சலவைக் கற்கோவில் ஒன்று உருவாக்கப்பட்டது. உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்று என்று கருதப்பட்ட இந்தக் கோவில் உலக முழுவதிலும் இருந்து பார்வையாளர்களைக் கவர்ந்தது.

பார்வையாளர்கள் இக்கோவிலைக் காண வந்த பொழுது மற்ற எல்லாப் பயணிகளையும் போலவே நினைவுப் பொருட்களை வாங்கினார்கள். இன்றைய நாட்களின் சுற்றுலாப் பயணிகள் போல அவர்கள் ஈஃபிள் கோபுரத்தின் பிரதி உருவம் ஒன்றையோ அல்லது மைக்கேல் ஆஞ்சலோவின் டேவிட்டையோ மட்டும் எடுத்துக் கொண்டு வீடு திரும்புவதில்லை. மாறாக, அவர்கள், "தியானாளின் கோவிலைப் போல வெள்ளியினால் செய்த சிறிய கோவில்களையே" (வ. 24) -அவைகளைக் கோவிலில் ஒப்புக் கொடுத்து பின் - எடுத்துச் சென்றார்கள். அவர்களுடைய மூட நம்பிக்கையான சிந்தனைகளில், அந்தக் கோவில்களை வீட்டுக்குக் கொண்டு செல்லுகையில் தியானாளின் பிரசன்னத்தைத் தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் செல்வதாக நம்பினார்கள்.

நீங்கள் கற்பனை செய்ய முடிகின்றபடியே, இது போன்ற வெள்ளிக் கோவில்கள் மிகுந்த இலாபமுள்ளவைகளாய் இருந்தன. இது, "[உள்ளூர்த்] தொழிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயம் வருவித்துக்" (வ.24ஆ) கொடுக்கும் தொழிலாயிருந்தது என்பதை லூக்கா ஆராய்ந்து அறிந்தார். இருந்தாலும், பவுலின் பிரசங்கித்தலானது இந்த வியாபாரத்தை நிறுத்தி விட்டது. வெள்ளிக் கோவில் செய்யும் தெமேத்திரியு மிகுந்த கோபமடைந்தான். அவன் அப்பகுதியில் இருந்த "இப்படிப்பட்ட தொழில் செய்கிற மற்ற வேலையாட்களையும்" (வ. 25அ) ஒன்று கூட்டி எச்சரிக்கை விடுத்தான்:

> மனுஷர்களே, இந்தத் தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறதென்று அறிவீர்கள். இப்படியிருக்க, கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்லவென்று இந்தப் பவுல் என்பவன் சொல்லி, எபேசுவில் மாத்திரமல்ல, கொஞ்சங் குறைய ஆசியா எங்கும்[15] அநேக ஜனங்களுக்குப் போதித்து, அவர்களை வசப்படுத்திக் கொண்டான் என்று நீங்கள் கண்டும் கேட்டும்

இருக்கிறீர்கள் (வ. 25ஆ, 26).

விக்கிரகாராதனைக் கெதிராகப் பவுல் கொண்டிருந்த உறுதிப்பாடு இரகசியமானதாக இருந்ததில்லை. அவர், "மனுஷருடைய சித்திரவேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகள்" (17:29) தேவனல்ல என்று அறிவித்தார். அவர் மனிதர்களை, "ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு, ... விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு'' (1 தெச. 1:9) திருப்புவதற்காகத் தமது சக்திகளை ஒப்புக் கொடுத்தார். அவருடைய பிரசங்கித்தலானது அதன் செயலுருவாக்கத்தைக் கொண்டிருந்தது; அவர், ஆர்ட்டெமிஸை(தியானாளை)த் தொழுது கொள்ளுவதை விட்டு "திரும்பும்படி கணிசமான எண்ணிக்கையுள்ள மக்களை இணங்கச் செய்து திருப்பியிருப்பார்'' - அது தெமேத்திரியு மற்றும் இருந்த விக்கிரக உற்பத்தியாளர்களின் இலாபங்களை வெகுவாய்க் குறையச் செய்தது. தெமேத்திரியு சக தொழிலாளர்களிடம் கூறிய தனது கூற்றில் நேர்மையானவனாகவே இருந்தான்; அவன் தனது வழிபாட்டுப் புத்தகத்தைக் காட்டிலும், தனது வருமானக் கணக்குப் புத்தகத்தைப் பற்றியே அதிகம் கவலைப்பட்டான்.

இருப்பினும் அவனும், சக தொழிலாளிகளும் பொருளாதார நஷ்டத்தைக்காட்டிப் பேரணி நடத்தி, பொது மக்களின் ஆதரவைப் பெற முடியாது என்று அறியுமளவு புத்திசாலியாக இருந்தான், எனவே அவன் மத ரீதியான தப்பெண்ணம் மற்றும் குடிகளின் கௌரவம் ஆகியவற்றைக் கொண்டு தனது குற்றச்சாட்டுகளை நிலைநிறுத்தினான்:

> இதனால் நம்முடைய தொழில் அற்றுப் போகும்படியான அபாயம் நேரிட்டிருக்கிறதுமல்லாமல், மகாதேவியாகிய தியானாளுடைய கோவில் எண்ணமற்றுப் போகிறதற்கும், ஆசியா முழுமையும் பூச்சக்கரமும் சேவிக்கிற அவளுடைய மகத்துவம் அழிந்து போகிறதற்கும் ஏதுவாயிருக்கிறது என்றான் (வ. 27).

அநேக ஏவப்படாத மனிதர்களின் உரைகளை கொண்ட நடபடிகளின் இப்பகுதியானது வழக்கத்திற்கு மாறானதாக

இருக்கின்றது. புறதெய்வ வழிபாட்டுக்காரர்களின் உதடுகள் கிறிஸ்தவத்தின் செயலுருவாகத்திற்குச் சாட்சி கொடுக்கும் படியாக லூக்கா அனுமதித்தார். சுவிசேஷத்தின் வல்லமைக்கு தெமேத்திரியுவின் வார்த்தைகளில் உள்ளதைக் காட்டிலும் மிக நல்ல சாட்சியாக வேறு எதுவும் காணப்பட முடியாது. பவுலின் பிரசங்கித்தலின் செயலுருவாக்கத்தைக் குறித்து தெமேத்திரியு மிகைப்படுத்திக் கூறினான் என்று யாராவது நினைத்தால், இதற்கு நாற்பது வருடங்களுக்குப் பிறகு, ஆசியாவிலிருந்து ட்ராஜன் பேரரசருக்குப் பிளீனி[16] என்பவர் எழுதியதில், தேவர்களின் கோவில்கள் கை விடப்படுவதற்குக் கிறிஸ்தவம் காரணமாயிற்று என்று முறையிட்டிருந்ததைக் கவனிக்கலாம்.

தெமேத்திரியுவின் எரிச்சலான வார்த்தைகள், விரும்பிய செயலுருவாக்கத்தைக் கொடுத்தன. அவன் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள், "கோபத்தால் நிறைந்து, எபேசியருடைய தியானாளே பெரியவள்" (வ. 28) என்று சத்தமிட்டுக் கூறத் தொடங்கினார்கள். அவர்கள் தங்கள் கோஷங்களைச் சத்தமிட்டுக் கூறிக் கொண்டே ''பட்டணத்து வீதிக்குப் பாய்ந்தோடினார்கள்" (வ. 28, மேற்கத்திய வசனம்). (கலகம் மூட்டுபவர்கள் தங்கள் காரணங்களுக்குப் பதிலிட எப்போதுமே கோஷங்களைக் கண்டு பிடிப்பதுண்டு). எதிர்ப்பாளர்கள் நகர் முழுவதும் அணி திரண்டு, செல்லுகையில் இன்னும் பல மக்களைச் சேர்த்துக்கொண்டு, ''பட்டணம் முழுவதும் கலகத்தினால் நிறை''யும் வரை ஓடினார்கள் (வ. 29அ). எண்ணிக்கை அதிகமான போது, "அவர்கள் ஒருமனப்பட்டு அரங்க சாலைக்குப் பாய்ந்தோடினார்கள்" (வ. 29ஆ), இது 25,000 பேர் அமரக்கூடிய மிகப்பெரிய திறந்தவெளி அரங்கமாயிருந்தது. ஒழுங்கற்ற கூட்டமானது அலை பாயும் கும்பலானது; அங்கு நடந்த செயல்பாடானது ஒரு கலகமானது.

### சில சீஷர்கள், மரணம் ஏற்படும் நிச்சயம் மற்றும் ஒரு "தற்காப்பு"

தீமையைத் தூண்டியவர்கள் நகர் முழுவதும் அணி வகுத்துச் சென்றபோது பவுலைப் பிடிப்பதற்கு அநேகமாய் முயற்சி செய்திருக்கலாம் - அந்தக் கும்பல் அவரைக் கொலை செய்யும் என்று ஆவலுடன் நம்பியிருக்கலாம் - ஆனால் அவர்கள் அந்த

அப்போஸ்தலரைப் பார்க்க முடியவில்லை. "பவுலுக்கு வழித் துணையாக வந்த மக்கெதோனியராகிய காயுவையும்[17] அரிஸ்தர்க்குவையும்[18]" (வ. 29இ) அவர்கள் கண்டார்கள், எனவே அவ்விருவரையும் அரங்கசாலைக்குள் இழுத்துக் கொண்டு சென்றார்கள். அது வெறி நிறைந்த ஒரு காட்சியாக இருந்தது; அங்கிருந்த சூழ்நிலையில் மரணம் என்பது நிச்சய மாய் இருந்தது. காயு மற்றும் அரிஸ்தர்க்கு ஆகியோரின் விதி ஒரு நூல் இழையில் தொங்கிக் கொண்டிருந்தது.

பவுலின் நண்பர்கள் அபாயத்தில் இருந்தார்கள் என்ற வார்த்தை அவருக்கு எட்டியபோது, அவர் விரைவாக அரங்க சாலையை நோக்கிச் சென்றார் - அநேகமாய் அவர் தமது கூட்டாளிகளை விடுவிப்பதற்காகத் தம்மையே கையளிப் பதற்காகச் சென்றிருப்பார். இருப்பினும், "பவுல் கூட்டத்துக் குள்ளே[19] போக மனதாயிருந்த போது, சீஷர்கள் அவனைப் போக விடவில்லை (வ. 30). அந்தக் கும்பலில் அறிவுக்கேற்ற செயல் எதுவும் இராது என்பதையும், பவுலை இழந்தால், கர்த்தரின் பணியானது தடைப்படும் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள் (2 சாமு. 21:17ஐக் காணவும்).

"ஆசியா நாட்டுத் தலைவரில் அவனுக்குச் சிநேகிதராயிருந்த சிலரும் அவனிடத்திற்கு ஆள் அனுப்பி, அரங்க சாலைக்குள் போக வேண்டாம் என்று எச்சரித்தார்கள்" (வ. 31) என்ற குறிப்பை லூக்கா இவ்விடத்தில் சேர்த்தார். ஆங்கில வேதாகமத்தில் இவ்விடத்தில் உள்ள "Asiarchs" என்ற வார்த்தை யானது ஒலிபெயர்ப்புச் செய்யப்பட்ட கிரேக்கக் கூட்டு வார்த்தையாகும், இதன் அர்த்தம் "ஆசியாவை ஆளுபவர்கள்"[20] என்பதாகும். "செல்வ வளமிக்க குடிமக்களில் இருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட இவர்கள் ... மத ஆராதனை பற்றியவைகளைத் தலைமையேற்று நடத்தவும், கடவுள்களைக் கனப்படுத் துவதற்காகத் தங்கள் சொந்த செலவில் வருடாந்திரப் பொது விளையாட்டுக்களைக் காட்சிப்படுத்தவும் நியமிக்கப்பட்டிருந் தார்கள். இவ்விடத்தில் இம்மனிதர்களின் நிலையைப் பார்க்கும் போது, இவர்கள் கிறிஸ்தவர்களாயிருந்தார்கள் என்று கூறுவது ஏற்புடையதாயிராது என்றாலும் குறைந்தபட்சம் அவர்கள் பவுலின் மீதும், அவர் ஆதரித்த காரணத்தின் மீதும் பரிதாபம் கொண்டவர்களாயிருந்தார்கள்.[21] ஆங்கில வேதாகமத்தில்

வசனம் 31ல் "repeatedly urged him" என்றுள்ளது. இது பவுலைத் தடுத்து நிறுத்துவது எவ்வளவு கடினமாயிருந்தது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

அதே வேளையில், அரங்க சாலைக்குள், "கூட்டத்தில்[22] அமளியுண்டாகி, சிலர் இப்படியும் சிலர் அப்படியுமாகப் பேசினார்கள்; தாங்கள் கூடிவந்த காரணம் இன்னதென்று அநேகருக்குத் தெரியாதிருந்தது" (வ. 32).[23] அது கும்பலின் காட்சி என்று கூறத் தகுதியுள்ளதாயிருந்தது. அமெரிக்காவின் ஆரம்ப கால அரசியல் மேதையும் எழுத்தாளருமான பெஞ்சமின் பிராங்க்ளின் அவர்கள் கும்பல் என்பது "மூளைகள் அற்ற தலைகள் கொண்ட நபர்கள் உள்ள கூட்டமாகும்" என்று விளக்கம் தந்துள்ளார்.

அந்தக் கும்பல் எவ்வளவாய்க் குழம்பியிருந்தது என்பதை விளக்கப்படுத்துவதற்கு லூக்கா "அப்பொழுது யூதர்கள் அலெக்சந்தர் என்பவனை முன்னிற்கத் தள்ளுகையில், கூட்டத்திலே சிலர் அவனை முன்னே இழுத்து விட்டார்கள்" (வ. 33அ) என்று கூறினார். பித்துப் பிடித்த விக்கிரகாராதனைக் காரர்களுடன் யூதர்கள் இருந்தது ஏன்? விக்கிரகாராதனைக் காரர்களின் அறியாமையினால் யூதக் கைத்தொழிலாளர்கள் ஆதாயம் பெற்றிருக்கச் சாத்தியக் கூறுண்டா? முன்னிற்கும்படி அவர்கள் தள்ளிய அலெக்சந்தர் என்பது யார்? பவுல், "கன்னானாகிய அலெக்சந்தர்" தமக்கு "வெகு தீமை செய்ததாகப் பின்னாளில் குறிப்பிட்டார் (2 தீமோ. 4:14; 1 தீமோ. 1:20ஐயும் காணவும்). இவன் அதே மனிதனாயிருக்கக் கூடுமா?[24] (அவன் யாராக இருந்தாலும்) யூதர்கள் அலெக்சந்தரை கும்பலின் முன்னிற்கத்தள்ளி பவுலினால் உண்டான எந்த இடர்ப்பாட்டிற்கும் யூதர்கள் காரணமல்ல என்று அலெக்சந்தர் தெளிவாக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்களா?[25] அலெக்சந்தரின் விருப்பம் எதுவாயிருந்தாலும், கூட்டத்திற்கு அது தெளிவாகவில்லை. ஒருவேளை சிலர், அலெக்சந்தரே அந்தக் கூட்டத்தின் தீமையைத் தூண்டியவன் என்று முடிவு செய்திருக்கலாம்; மற்றவர்களோ, அவன்தான் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவன் என்று நினைத்திருக்கலாம்.

இருக்கைகளின் வரிசைகளுக்குக் கீழே இருந்த மேடைப் பகுதிக்கு அலெக்சந்தர் "இழுத்து விடப்பட்டிருக்கலாம்." அவன்

கையமர்த்தி, “ஜனங்களுக்கு மறு உத்தரவு சொல்ல மனதா யிருந்தான்'' (வ. 33ஆ), ஆனால் அந்த வாய்ப்பை அவன் பெறவேயில்லை. “அவன் யூதனென்று[26] அவர்கள் அறிந்த போது, எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று இரண்டு மணி நேரமளவும் எல்லாரும் ஏகமாய்ச் சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்” (வ. 34).

அந்தக் கூட்டமானது ஆர்ட்டெமிஸ்(தியானுளுக்கு)ஸுக் காக மட்டும் கவலைப்படவில்லை. கோவிலுக்கு அபாயம் நேர்ந்தால் தங்கள் பொருளாதாரமும் அபாயத்திற்குள்ளாகும் என்பதை குழப்பத்தில் இருந்த அந்தக் கும்பல் உள்ளுணர்வால் புரிந்து கொண்டிருந்தது. பெரிய தொழிற்சாலை ஒன்று அழியும்போது, அப்பகுதியில் உள்ள ஒவ்வொருவரும் பாதிப்புக்குள்ளாகின்றார்கள். அவர்களும் ஒருவேளை தங்கள் வருமானக் கணக்குப் புத்தகத்தில் ஏற்படும் வேதனையை உணர்ந்து அலறியிருக்கலாம்.

மனநோயாளிகளான 25,000 எபேசியர்கள் இரண்டு மணி நேரமளவாகக் கூச்சலிட்ட அந்த நிகழ்ச்சியைக் கற்பனை செய்ய நான் முயற்சி செய்திருக்கின்றேன்! இது, ஒரு இரவில் எனது வசிப்பிடப் பகுதியில் இருந்த நாய்கள் எல்லாம் ஒன்று கூடி ஒரே சமயத்தில் ஊளையிட முடிவு செய்த நிகழ்ச்சிக்கு ஏறக்குறைய ஒத்து வருவதாய் இருந்தது. அந்த நிகழ்ச்சி தொடங்கி அடுத்த சில நிமிடங்களில் நான் எனது தலை முடியைப் பிய்த்துக் கொண்டேன்!

## ஒழுங்கில்லாமை, அபாயம் மற்றும் கலைந்து செல்லுதல்

அந்த அரங்க சாலையிலிருந்து சில கட்டிடங்கள் தள்ளி, நகராட்சியின் தலைமையகம் இருந்தது. நகர அலுவலர்கள் அரங்க சாலைக்குள் நடந்த அமளிபற்றி அறிந்திருக்க வேண்டும், ஆனால் இரண்டு மணிநேரமளவும் பைத்தியமாய்க் கூச்சலிட்டு அக்கும்பல் தனது சக்தியை வீணாக்கும் வரையிலும் அக் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முயற்சி எதுவும் எடுக்கப்பட வில்லை. அதன் பிறகு பட்டணத்துச் சம்பிரதியானவர் மேடைப் பகுதிக்கு வந்து ஜனங்களை அமர்த்தினார் (வ. 35). “பட்டணத்துச் சம்பிரதி”[27] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொற்றொடரானது “வேதபாரகர்'' என்பதற்குப்

*பயன்படும் வழக்கமான சொல்லாகவும், இந்த நகர அலுவலர் நகரத்தின் வியாபாரத்தைப் பதிவு செய்தார் என்ற உண்மை யைக் குறிப்பிடுவதாகவும் இருந்தது. இருப்பினும், எபேசு நகரில் இவர் ஒரு செயலாளர் என்பதற்கும் சற்று மேலானவராக இருந்தார். இவர், "மிக முக்கியமான அதிகாரியாகவும்* ["the mayor"; The Living Bible] *நகரவையின் முதன்மைச் செயல் அலுவலராகவும், எபேசு நகருக்கும் ரோம அதிகாரிகளுக்கும் இடை நின்று செயல்படுபவராகவும் இருந்தார்" என லூயிஸ் ஃபாஸ்டர் விளக்கமளிக்கிறார்.*

*தெமேத்திரியு கலகத்தைத் தூண்டுபவன் என்று தன்னை நிருபித்தது போல, இந்த அதிகாரி அதை அடக்குபவரென்று தன்னை நிரூபித்தார். அரங்க சாலைக்குள் இருந்தவர்களுக்கு அவர் மறு உறுதிப்பாடு தருவதில் ஆரம்பித்தார்: "எபேசியரே, எபேசியருடைய பட்டணம் மகா தேவியாகிய தியானாளுக் கும் வானத்திலிருந்து விழுந்த சிலைக்கும் கோவிற்பரிசாரகியா யிருக்கிறதை*[28] *அறியாதவன் உண்டோ?" (வ. 35). பிறகு அவர் தொடர்ந்து உரையாற்றினார்: "இது எதிர்பேசப்படாத காரியமாகையால், நீங்கள் ஒன்றும் பதறிச் செய்யாமல் அமர்ந்திருக்க வேண்டும்" (வ. 36).* NCV*யில், "நீங்கள் எதையும் செய்யுமுன் நின்று சற்று நிதானித்துப் பாருங்கள்" என்றுள்ளது.*

*இரண்டு மணி நேரம் அவர்கள் சத்தமிட்டுக் கொண்டிருந்த வேளையில், அந்த அலுவலர் தனது ஆராய்ச்சியைச் செய்திருந் தார்; அவர் உண்மைகளை அறிந்திருந்தார். அவர், காயுவையும் அரிஸ்தர்க்குவையும் சுட்டிக் காட்டி, "இந்த மனுஷரை இங்கே கொண்டு வந்தீர்கள்; இவர்கள் கோவிற்கொள்ளைக்காரரு மல்ல, உங்கள் தேவியைத் தூஷிக்கிறவர்களுமல்ல" (வ. 37) என்று அறிவித்தார். இந்த இரண்டு கிறிஸ்தவர்களும் ஆர்ட்டெமிஸுக்கு (எதிராகப் பேசித்) தூஷிக்கிறவர்கள் அல்ல என்று அலுவலர் கூறியபோது, அவர் ஒரு பொய்யாக அதைக் கூறினாரா? அதற்குச் சாத்தியக்கூறு உண்டு. (1) அந்த அலுவலர், அங்கு நடப்பது என்னவென்றே அறியாதவர்கள் மிகுந்திருந்த, குழப்பமான ஒரு கூட்டத்திடம் பேசிக் கொண்டிருந்தார் என்பதையும் (வ. 32); (2) இந்த மனிதர்களைப் பாதுகாப்பதல்ல, ஒழுங்கை மறுபடி மீட்பதே அவரது நோக்கமாயிருந்தது என்பதையும்; மற்றும் (3) அவர் கிறிஸ்தவராயிராததினால்,*

தமது நோக்கத்திற்குப் பயன்படுமென்றால் அவர் ஒரு பொய்யைச் சொல்லத் தயங்காதிருந்தார் என்பதையும் நினைவு கூருங்கள். இதற்கு மறுபுறத்தில், இந்த அலுவலர் உண்மையை நீண்ட தூரம் இழுத்திருந்தால், தெமேத்திரியுவும், மற்ற தொழிலாளிகளும் இவருக்கு அறைகூவல் விடுத்திருப்பார்கள். இவர் தமது இலக்கில் இருந்து அதிக தூரம் சென்று விடவில்லை. பவுலும் அவரது உடன் ஊழியர்களும் "கைகளினால் செய்யப் பட்ட தேவர்கள் தேவர்களல்ல" (வ. 26ஆ) என்று பிரசங்கித் திருக்கையில் அவர்கள் ஆர்ட்டெமிஸ் மீது தனிப்பட்ட தாக் குதல் எதையும் செய்யவில்லை. அவர்கள் விக்கிரகாராதனைக்கு எதிரான பேரணி நடத்தவில்லை; அவர்கள் கோவிலைக் கொள்ளையடிக்கவில்லை; அவர்கள் சுவிசேஷத்தை "மட்டுமே" பிரசங்கித்தார்கள்.

தெமேத்திரியுவும் மற்ற தொழிலாளிகளும் எதிர்ப்புத் தெரிவிக்கும்படி தூண்டப்பட்டிருந்தால், அந்தக் கலவரத்தை அவர்கள்தான் ஆயத்தம் செய்தார்கள் என்று அந்த அலுவலர் கண்டறிந்து அவர்களைத் திறமையுடன் அமைதிப்படுத்தி யிருக்கலாம்:

> தெமேத்திரியுக்கும் அவனைச் சேர்ந்த தொழிலாளி களுக்கும் ஒருவன்மேல் ஒரு காரியம் உண்டாயிருந்தால், நியாயம் விசாரிக்க நாட்களுண்டு, தேசாதிபதிகளும் இருக்கிறார்கள்; ஒருவர் பேரிலொருவர் வழக்காடிக் கொள்ளட்டும். நீங்கள் வேறே யாதொரு காரியத்தைக் குறித்து விசாரிக்க வேண்டியதானால், அது நியாய சங்கத்திலே[29] தீர்க்கப்படும் (வ. 38, 39).

அந்தச் சம்பிரதி இந்த வார்த்தைகளுடன் இரு நோக்கங் களை நிறைவேற்றினார். முதலாவதாக, புகார்களைக் கையாளு வதற்கு சரியான மற்றும் தவறான வழிகள் இருப்பதை அவர் வலியுறுத்தினார் - அவர்கள் தவறான வழியைத் தேர்ந்து கொண்டிருந்தார்கள். இரண்டாவது, இதன் பின்னர் ஏற்படும் கடுமையான விளைவுகளுக்கு யார் பொறுப்பாளியாக நேரிடும் என்பதை அவர், அந்தத் தொழிலாளர்கள் அறியும்படி செய்தார்.

பிறகு அந்த அலுவலர், சாத்தியமாகக் கூடிய விளைவு களைப் பற்றிக் குறிப்புத் தந்தார்: "இன்றைக்கு உண்டான

கலகத்தைக் குறித்து நாம் உத்தரவு சொல்ல ஏதுவில்லாத படியால், இந்தக் கலகத்தைக் குறித்து நாங்கள் விசாரிக்கப் படும்போது, குற்றவாளிகளாகிறதற்கு ஏதுவாயிருப்போமே என்று சொல்லி," (வ. 40). இந்த வார்த்தைகளின் வலுவை நாம் மதித்துணருவதற்கு, கலகங்களைக் குறித்து ரோமாபுரியின் எண்ணப் போக்கை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ரோமா புரியின் கண்களில், குடிமக்களின் ஒழுங்கின்மையை விட மிக மோசமானவைகளாகச் சில குற்றங்களே காணப்பட்டன (ஒரு கலகத்தைத் தூண்டிவிடுதல் என்பது மரண தண்டனைக்கு ஏதுவான குற்றமாகும்). எபேசு நகரம் ஒரு சுதந்தரமான நகரமாய் இருந்து, பல சலுகைகளை மகிழ்ச்சியுடன் அனு பவித்தது. அரங்க சாலையில் நடந்த இந்த அமளியானது ரோமாபுரிக்கு அறிக்கை செய்யப்பட்டால், எபேசு நகரத்திற்கு இருந்த எல்லா சலுகைகளும் இழக்கப்பட்டுப் போகா விட்டாலும், பெரும்பாலான சலுகைகள் இழக்கப்பட்டுப் போகும். ரோமச் சேனைகள் வந்து அந்த நகரத்தை எடுத்துக் கொள்ளும். குற்றம் செய்தவர் சிறையில் இடப்படலாம் அல்லது கொலைத் தண்டனை கூடக் கொடுக்கப்படலாம் (அதை நடக்க அனுமதித்த பட்டணத்துச் சம்பிரதியும் அத்தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்)! குறைந்தபட்சம், தண்டத் தொகை விதிக்கப்படும், வரிகள் கூட்டப்படும் மற்றும் சேவைச் சங்கங்கள் கலைக்கப்படலாம். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், தட்டான்களும், மற்றவர்களும் இக் கலகத்தை ஆரம்பித்தபோது தாங்கள் காப்பாற்ற நினைத்த அதே வருமானக் கணக்குப் புத்தகமானது தாக்கப்படலாம்!

அந்த அலுவலர் பேசி முடித்தபோது, அவர் பார்த்த அந்தக் கூட்டமானது சில நிமிடங்களுக்கு முன்பிருந்த கட்டுக் கடங்காத கும்பல் என்ற நிலையிலிருந்து மிகத் தொலைவுக்குச் சென்று இருந்தது. "பின்பு கூட்டத்தை அனுப்பி விட்டான்" (வ. 41) என்று லூக்கா பதிவு செய்தார். மக்கள் அரங்க சாலை யிலிருந்து அதிவிரைவாகத் தங்கள் வீடுகளுக்குச் செல்லுகையில் அமைதியுடன், தலைகளைத் தாழ்த்திச் சென்றதை நான் கற்பனை செய்ய முடிகின்றது. அத்துடன், அந்த அலுவலர் தமது நெற்றியைத் துடைத்துக் கொண்டு, நகரவைக்குச் சென்று, அதிகமான உலக அலுவல்களைக் கவனிக்கலானார் என்பதை

யும் நான் காண முடிகின்றது. அவர், "நான் இதை அன்றாடம் செய்யத் தேவையில்லை என்பதற்காக மகிழ்ச்சியடை கின்றேன்!" என்றும், "நான் செய்கின்ற யாவற்றுக்கும் போதிய அளவு அவர்கள் எனக்கு ஊதியம் தருவதில்லை!" என்றும் கூட நினைத்தார் என்று நான் கற்பனை செய்கின்றேன்.

பவுலின் பயணக் கூட்டாளிகளும், அரங்க சாலைக்குள் இழுத்துச் செல்லப்பட்டவர்களுமான காயுவுக்கும் அரிஸ்தர்க் குவுக்கும் என்ன ஆயிற்று? அவர்கள் அநேகமாய் அலுவலரின் மன்னிப்புகளுடன் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும், ஏனென்றால் அடுத்த அதிகாரத்தில் அவர்கள் பவுலுடன் மறுபடியும் பயணம் செய்வதை நாம் காணுகின்றோம். (அப். 20:3, 4).

இது மார்க்கத்திற்கு (வழிக்கு) கிடைத்த இன்னொரு வெற்றி யாகும். மீண்டும் ஒருமுறை கிறிஸ்தவர்களின் மீதிருந்த குற்றச் சாட்டு நீக்கப்பட்டிருந்தது, அவர்கள்மீது வழக்குரைத்தவர்கள் கண்டனம் பண்ணப்பட்டார்கள். கிறிஸ்தவர்களல்ல ஆனால் அவர்கள்மீது வழக்குரைத்தவர்களே சமுதாயத்தைப் பயமுறுத் தியவர்கள் என்பதை லூக்கா தமது வாசகர்களுக்குக் காண்பித்திருந்தார்.

## முடிவுரை

அரங்க சாலையில் நடந்த கலகமானது பவுல் ஏற்கனவே எபேசுவை விட்டுச் செல்ல வேண்டும் என்று திட்டமிட்டிருந் ததைச் செய்ய வேண்டிய காலம் வந்தாயிற்று என்பதை அவர் ஏற்றுக் கொள்ளும்படி, செய்தது. திறந்த கதவானது (1 கொரி. 16:9) அறைந்து மூடப்பட்டது. இவ்விதமாக, "கலகம் அமர்ந்த பின்பு, பவுல் சீஷரைத் தன்னிடத்திற்கு வரவழைத்து, வினவிக் கொண்டு, மக்கெதோனியாவுக்குப் போகப் புறப்பட்டான்" (அப். 20:1).

எபேசுவில் நடந்த கலகம் பற்றிய நாடகம் போன்ற இவ்விபரமானது நமக்கு அநேக பாடங்களைக் கொண்டுள்ளது. இது, சிலுவையின் பகைஞர்களும் கூட சுவிசேஷத்தின் வல்லமையை உணர்ந்து கொண்டதைக் காண்பிக்கின்றது. சுவிசேஷமானது ஆர்ட்டெமிஸ் வழிபாட்டிற்கு ஒரு அச்சுறுத்த

லாயிருந்தது என்று தெமேத்திரியு முடிவு செய்தது சரியே. ஒரு காலத்தில் உயர்வான நிலையில் இருந்த ஆர்ட்டெமிஸ்ஸின் கோவிலானது இன்று அழிந்து போன ஒரு குப்பை மேடாக இருக்கின்றது. அதில் ஒரே ஒரு தூண் மட்டுமே நின்று கொண்டுள்ளது; அதன் உச்சியில் நாரையின் கூடொன்று உள்ளது.

இருப்பினும், பணத்தைப்பற்றி அதிகமாய்க் கவலைப் பட்டுக் கொண்டிருக்கக் கூடாது என்ற சரியான நேரத்திலான எச்சரிக்கையே நமது காலத்திற்கு விசேஷித்த தனிச் சிறப்புடைய தாய் இருக்கின்றது. பணமானது ஒரு கருவியாகவோ அல்லது ஒரு விக்கிரகமாகவோ ஆகக் கூடும். நாம் தேவனை ஆராதித்து, அவரது காரியங்களினிமித்தமாகப் பணத்தைப் பயன்படுத்தக் கூடும், அல்லது நாம் பணத்தை ஆராதித்து, அதிகப் பணம் ஈட்டுவதற்கு மதத்தைப் பயன்படுத்தக் கூடும். ஒரு கணம் பின்சென்று, தெமேத்திரியுவும் அவனது நண்பர்களும் சர்வ வல்ல பணத்தின்மீது கொண்டிருந்த ஏக்கத்தை நோக்குங்கள்; பிறகு சுயபரிசோதனை என்ற கண்ணாடியை நோக்குங்கள். பணத்தைக் குறித்து நமது எண்ணப் போக்கு யாது? மற்றவர்களுக்கு உதவுவதற்கோ அல்லது கிறிஸ்துவினிமித்தம் செலவு செய்வதற்கோ நமக்கு வாய்ப்புக் கொடுக்கப்படுகையில் நாம் எவ்விதத்தில் பதில்செயல் செய்கின்றோம்? (உங்கள் எண்ணப் போக்கு என்ன என்பதை நீங்கள் உறுதியாய் அறிந் திராவிட்டால், தாராளமான தொகை ஒன்றைக் கொடுத்து, அதைப் பற்றி நீங்கள் என்ன உணருகின்றீர்கள் என்று கேளுங்கள்!) கிறிஸ்தவமானது நமது வருமானக் கணக்குப் புத்தகத்தைத் தாக்கும்பொழுது அது நம்மைப் புன்னகைக்கச் செய்ய வேண்டும், புண்படுத்தக் கூடாது என்று நான் ஜெபிக்கின்றேன்.

## பிரசங்கக் குறிப்புகள்

இராபர்ட் ஒகல்ஸ்பை அவர்கள், பட்டணத்துச் சம்பிரதியின் உரை பற்றிய உற்சாகமானதொரு பயன்பாட்டைக் கொண்டிருக்கின்றார். அந்த உரையை அவர், “தப்பெண்ணத்

தைக் கையாளுவது எப்படி" என்பதற்காக ஒரு பாடம் என்று அழைக்கின்றார் மற்றும் நாம் போதிக்கும்போது எதிர் கொள்ளும் தப்பெண்ணங்களைக் கையாளவும் பயன் பாட்டை மேற்கொள்ளலாம். (*A Group discussion study of Acts,* [Richardson, Tex.: RKO Publications, 1971], 91, 92).

குறிப்புகள்

*[1]2 கொரிந்தியர் 11:28 வசனமானது இந்த சபைகளைக் குறித்துப் பவுலின் கவலை பற்றிப் பேசுகின்றது. அவர்களை உற்சாகப்படுத்தும் வாய்ப்பு ஒவ்வொன்றையும் அவர் அநுகூலமாக்கினார் என்பதில் ஐயமில்லை, கொரிந்து சபையாரை அவர் உற்சாகப்படுத்தியது போலவே இவைகளையும் செய்தார். [2]1 கொரிந்தியர் 5:9ல் குறிப்பிடப்பட்ட கடிதமானது (1 கொரிந்தி யருக்கு முன்பு எழுதப்பட்டது) 2 கொரிந்தியர் நிருபத்தின் ஒரு பாகமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளது என்று சிலர் நம்புகின்றார்கள். இருப்பினும், அந்த முதல் கடிதத்தில் கூறப்பட்டவைகள் யாவும் 1 கொரிந்தியரில் மறுபடியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன என்பதுதான் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாகும். அது பாதுகாக்கப்படத் தேவையில்லாதது என்பதை தேவன் அறிந்திருந்ததால் அது பாதுகாக்கப்படவில்லை. ஏவப்பட்ட மனிதர்கள் எழுதிய எல்லாவற்றையும் புதிய ஏற்பாடு தன்னுள் கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியம் எதுவும் இல்லை (கொலோ. 4:16); நமக்குத் தேவையான யாவும் அதனுள் அடங்கியிருக்கின்றது. [3]இந்த இரு வசனக்குறிப்புகளும், மூன்றாம் பயணமொன்றைக் குறிப்பிடுகின்றன. இது, பவுல் தமது இரண்டாம் பயணத்தின் முடிவில் கொரிந்துவிலிருந்து சென்றதற்கும், மூன்றாம் பயணத்தில் கொரிந்துவுக்கு வந்ததற்கும் இடைப்பட்ட கால அவகாசத்தில் இரண்டாம் முறை அங்கு சென்றிருக்கக் கூடியதை அவசியப் படுத்துகின்றது. இது பெரும்பாலும், பவுல் எபேசுவில் வாழ்ந்து ஊழியம் செய்து கொண்டிருந்த நாட்களில் நடந்திருக்க வேண்டும். [4]இது, காட்டு மிருகங்களைப் போல நடந்து கொண்ட மனிதர்களைக் குறிக்க "துஷ்ட மிருகங்கள்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்திய உருவக நடையாக இருக்கலாம். ரோமக் குடிமகன் என்ற முறையில் பவுல், துஷ்ட மிருகங் களுடன் போராடும்படி சட்டப் பூர்வமாக வலியுறுத்தப்படக் கூடாது. [5]அரங்க சாலையின் கும்பல் காட்சியையே (19:23-41) "துஷ்ட மிருகங்கள்" என்று பவுல் குறிப்பிட்டதாகப் பலர் நம்புகின்றார்கள், ஆனால் அரங்க சாலையில் நடந்த இந்த நிகழ்ச்சிக்கு முன்னதாகவே 1 கொரிந்தியர் நிருபம் எழுதப்பட்டு விட்டது. மேலும், இந்தக் கலகம் நடந்தபோது பவுல் அரங்க சாலைக்குள் செல்லவில்லை (வ. 30, 31), எனவே அங்கு அவ்விடத்தில் அவர் ஒருவருடனும் போராடவில்லை. இது லூக்கா நமக்குக் கூறாத வேறொரு நிகழ்ச்சியைப் பற்றியது என்பதே பெரும்பாலும் ஏற்புடையது. [6]பவுல் தாம் நிலைநாட்டிய சபைகளை மறுபடியும் சென்று பார்ப்பதை வழக்கமாய்க் கொண்டிருந்தார் (14:22, 23; 15:36, 41; 18:23). இந்நிகழ்ச்சி வரையிலும்,*

*நாம் அறிந்துள்ளபடி, இரண்டாம் பயணத்தில் அவர் நிலைநாட்டியிருந்த சபைகளில் கொரிந்துவைத் தவிர வேறு எந்த சபைக்கும் அவர் மறுபடியும் சென்று பார்க்கவில்லை. [7]ரோமாபுரியில் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றி, பிறகு, அப்பேரரசின் தூர மேற்கு பகுதிகளுக்கு - ஸ்பெயின் (ரோமர் 15:22-24) நாட்டிற்கு - போகிறதற்கும் பவுல் நம்பிக்கையுடன் இருந்தார்; (பவுல் ரோமாபுரி செல்வதற்கு இன்னொரு காரணமும் இருந்தது; அவர் அங்கு இருந்த கிறிஸ்தவர்களைப் பெலப்படுத்த விரும்பினார் [ரோமர் 1:11].) [8]செய்தியாளர்களின் வருகை, கடிதம் வந்து சேருதல் மற்றும் "குலோவேயாளின் வீட்டாருடைய" அறிக்கை ஆகியவை தனித்தனி நிகழ்ச்சிகளாயிருக்கச் சாத்தியக்கூறு உண்டு. குலோவேயாள் (அவள் யாராயிருப்பினும்), சபையில் இருந்து நிருபத்தைக் கொண்டு வந்தவர் களையே செய்தியாளர்களாக அனுப்பினாள் என்பதே எளிய காட்சி யமைப்பு ஆகும். [9]பவுல் தமது நிருபங்களில் பெரும்பாலானவற்றைத் தமது கைகளினால் எழுதவில்லை என்பதை 1 கொரிந்தியர் 16:21 சுட்டிக் காட்டுகின்றது. ஒரு நிருபத்தில் முதலாவதாக, பவுல் தம்முடன் சக எழுத்தாளர் இருப்பதாகச் சுட்டிக்காட்டும் செயலானது (எடுத்துக்காட்டாக, 1 கொரி. 1:1, 2) வழக்கமாகப் பவுல் அந்தத் தனி நபரிடம் எழுதும்படி கூறுவதை சுட்டிக்காட்டுகின்றது. [10]ரோமர் 16:23ல் (2 தீமோ. 4:20ஐயும் காணவும்) குறிப்பிடப்பட்டுள்ள எரஸ்து என்பவர் கொரிந்து "பட்டணத்து உக்கிராணக்கார" ராக இருந்திருக்கச் சாத்தியம் உள்ளது. அப்படியிருந்தால், பவுல் ஏன் கொரிந்தியர்களிடம் தாம் எரஸ்துவை அனுப்பி வைத்திருந்ததைக் கூறவில்லை என்பதை இது விளக்குவதாயிருக்கும்; அதாவது அவர் "வீட்டுக்குச் சென்றார்" என்று மட்டுமே பவுல் குறிப்பிட்டார்.*

*[11]நிகழ்ச்சிகளின் மற்ற வரிசையமைவுகளும் சாத்தியமானவைகளே யாகும். எடுத்துக்காட்டாக, பவுல் தீமோத்தேயுவை நிருபத்துடன் கொரிந்துவுக்குத் திரும்பும்படி கேட்டிருக்கலாம். பிறகு தீமோத்தேயுவின் வருகையைத் தொடர்ந்து பவுல் தீத்துவை அனுப்பியிருக்கக் கூடும், பிறகு அவர் தீமோத்தேயுவையும் எரஸ்துவையும், கூறப்பட்டிராத ஒரு பயணத்தில் மக்கெதோனியாவுக்கு அனுப்பியிருக்கலாம். (முன்பு குறிப்பிட்டபடி, ஏதோ காரணத்தினால் லூக்கா, நடபடிகள் புத்தகத்தில் தீத்துவைப் பற்றி ஒருபொழுதும் குறிப்பிடவில்லை.) மற்ற ஆதாரங்களில் இருந்துதான் நாம் அவருடைய இயக்கங்களை (செயல்பாடுகளை) மறுகட்டுமானம் செய்ய வேண்டியதாய் இருக்கின்றது). [12]பவுல் எபேசுவை விட்டுப் புறப்பட ஏற்கனவே முடிவு செய்திருந்தாலும், அங்கிருந்து செல்லுமுன்பாக அவர் கொரிந்து சபையைப் பற்றித் தீத்துவிடம் கேட்பதற்காகக் காத்திருக்கத் திட்டமிட்டிருக்கலாம் (2 கொரி. 2:12, 13). அங்கு நடந்த கலகமோ அவர் உடனடியாகக் கிளம்ப வேண்டியதை அவசியப்படுத்திற்று. [13]"மார்க்கம்" என்பது கிறிஸ்தவத்தைக் குறிப்பிடுவதற்கு லூக்கா மிகவும் விருப்பத்துடன் பயன்படுத்தும் சொற்றொடர்களில் ஒன்று ஆகும் (9:2; 19:9, 23; 22:4; 24:14, 22). [14]ஆர்ட்டெமிஸை வழிபட்ட முப்பதுக்கும் மேற்பட்ட இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. துருக்கியில் இருந்த சர்தையில் சிதிலங்களை நான் சென்று பார்த்த பொழுது, ஆர்ட்டெமிஸுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட பேராலயத்தின் எஞ்சிய பகுதிகளைக் கண்டேன். [15]இது ஆசியாக் கண்டமல்ல, ஆனால் ரோமராஜ்யப் பகுதியில் இருந்த ஆசியா ஆகும்.*

*[16]இளைய பிளீனி (கி.பி. 61-112) என்பவர் கி.பி. 100ல் அதிகாரியாகப் பணியாற்றிய ரோமானிய செனெட்டர் ஆவார். பின்னாளில் இவர் பித்தினியாவின் ஆளுநர் என்ற வகையில் டிராஜன் பேரரசருடன், மாகாணத் திற்குள் கிறிஸ்தவர்கள் நடத்தப்பட வேண்டிய முறை என்ன என்பது போன்ற கேள்விகளைப் பற்றி அஞ்சல் வழித்தொடர்பு கொண்டார். [17]"மக்கெதோனியாவில்" இருந்து வந்த இந்த காயு என்பவர் யார் என்பது நமக்கு உறுதியாய்த் தெரிவதில்லை. புதிய ஏற்பாட்டில் காயு என்ற பெயரில் பலர் குறிப்பிடப்பட்டுள்ளனர் (அப். 20:4; ரோமர் 16:23; 1 கொரி. 1:14; 3 யோவா. 1). அப். 20:4ல் குறிப்பிடப்பட்ட அதே காயு என்பவர்தான் 19:29 லும் குறிப்பிடப்பட்டதாகச் சிலர் நம்புகின்றனர்; மேற்கத்திய வசனத்தில் அப். 20:4ல் வரும் காயு தெர்பஸ் (மக்கெதோனியாவின் ஒரு நகரம்) என்ற ஊரிலிருந்து வந்தவர் என்று குறிப்பிடப்படுகின்றது, இது தெர்பை என்ற ஊர் அல்ல. [18]அரிஸ்தர்க்கு என்பவர் மக்கெதோனியாவின் தலைநகரமான தெசலோனிக்கேயில் இருந்து வந்தவர் (அப். 20:4). இவர் பவுலுடன் முதலில் எருசலேமுக்கும், பிறகு ரோமாபுரிக்கும் (அப். 27:2) பயணம் சென்றார். பவுல் ரோமாபுரியிலிருந்து எழுதிய போது, அரிஸ்தர்க்குவை, "என்னோடு கூடக் காவலில் இருக்கிறவன்'' (கொலோ. 4:10) என்று குறிப்பிட்டார். (பிலேமோன் 24ஐயும் காணவும்). [19]இவ்விடத்தில்* "assembly" *என்பது அநேகமாக மிகச் சிறந்த மொழிபெயர்ப்பல்ல. இங்கு மொழியாக்கம் செய்யப்பட்ட கிரேக்க வார்த்தை ekklesia (வ. 32ஐக் காணவும்) அல்ல ஆனால் "மக்கள்" என்ற நேரடி அர்த்தம் கொண்ட* demos *என்ற வார்த்தை யாகும். மற்ற இடங்களில் இது மக்களின் ஆலோசனைக் கூட்டத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது (இந்த இதழில் 17:5க்கான குறிப்பு களைக் காணவும்); ஒருவேளை பவுல், அந்தக் குழுவானது ஒரு வகையான ஆலோசனைக் கூட்டம் என்றும், அவர்களுடன் தாம் தர்க்கம் செய்யலாம் என்றும் எண்ணியிருந்ததைச் சுட்டிக்காட்டுவதற்கு இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கலாம். [20]லூக்கா சரியான சொற்றொடரைப் பயன் படுத்தினார் என்று புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்தி யுள்ளார்கள்.*

*[21]உயர் இடத்திலிருந்த இந்த அதிகாரிகள் கிறிஸ்தவத்தின் மீது பரிவுள்ளவர்களாய் இருந்தார்கள் என்பது, கிறிஸ்தவமானது சமுதாயத்தில் எந்த விதமான அச்சுறுத்தலையும் ஏற்படுத்தவில்லை என்பதற்கு லூக்கா வினால் தரப்பட்ட கூடுதலான ஆதாரமாகும். [22]இவ்வசனத்தில் "கூட்டம்" என்பது ekklesia என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது, இவ்வார்த்தையானது வழக்கமாக "சபை" என்று மொழிபெயர்க்கப்பட்டது. வசனங்கள் 32, 39 மற்றும் 41ல் ekklesia என்ற வார்த்தை மார்க்க ரீதியற்ற விதத்தில் ஒரு கூட்டத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது. "அப்போஸ் தலருடைய நடபடிகள், பாகம் 1" உள்ள சொற்பொருள் அகராதியில்* "church" *- சபை என்ற வார்த்தையின் கீழ்க் காணவும். [23]புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்துக்கு ஏற்படும் எதிர்ப்புகளில் பெரும்பாலானவை அறியாமையின் விளைவாகவே உள்ளன. [24]2 தீமோத்தேயு 4:14ல் உள்ள அலெக்சந்தரும் 1 தீமோத்தேயு 1:20ல் உள்ள அலெக்சந்தரும் ஒரே நபர்தான் என்ற யூகத்தின் கீழ் பார்த்தால், பவுல் குறிப்பிட்ட இந்த அலெக்சந்தர் கிறிஸ்தவராகி, பிறகு விழுந்து போனவராயிருந்தார். 1 தீமோத்தேயுவைப்*

*பவுல் எழுதியபோது தீமோத்தேயு எபேசுவில் இருந்ததால் (1:4), இந்த அலெக்சந்தர் எபேசுப் பட்டணத்தைச் சேர்ந்தவராய் இருக்கலாம். லூக்கா இவ்விடத்தில் அவருடைய பெயரினால் அவர் (அலெக்சந்தரைக்) குறிப்பிடும் உண்மையானது, வாசகர்கள் அவரை யாரென்று அறிந்திருப்பார் கள் என்று சுட்டிக் காட்டுகின்றது. [25]எபேசுவில் இருந்த யூதர்கள், விக்கிரகாராதனையைப் பொறுத்தமட்டில், "வாழு, வாழ விடு" என்ற கொள்கையைக் கடைப் பிடித்தார்கள், இந்தக் கொள்கையானது தேவனால் ஒருபொழுதும் அங்கீகரிக்கப்பட்டதாய் இருக்க முடியாது. [26]யோசிப்பஸ் என்பவரின் எழுத்துக்களின்படி, எபேசு நகரக் குடிமக்கள் யூதர்களை இழிவாகக் கருதினார்கள். அநேகமாக அலெக்சந்தரின் தோற்றம் மற்றும்/ அல்லது உடை ஆகியவற்றில் இருந்து அவர் ஒரு யூதர் என்று அவர்கள் அறிந்திருப்பார்கள். [27]லூக்கா சரியான சொற்றொடரை மிகச் சரியாகப் பயன்படுத்தினார் என்பதை புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துகின்றார்கள். [28]"கோவிற் பரிசாரகி" என்பது "கோவில் கூட்டுபவர்" என்ற நேரடியான அர்த்தம் தரும் எளிய கிரேக்கச் சொற்றொடராகும். [29]இந்த "நியாய சங்கம்" என்பது, "நகர மக்களின் முறையான கூட்டம்" எனப்பட்டது* (NCV).